## சுருக்கம்

மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் - 2021-2022 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகள் - நரிக்குறவர் நல வாரியம் மற்றும் சீர்மரபினர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகையினை உயர்த்தி வழங்குதல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை

**அரசாணை (நிலை) எண்.53** **நாள் 01.11.2021**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**
**பிலவ - ஐப்பசி 15**
**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.29, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை, நாள் 28.03.2008.
2. அரசாணை (நிலை) எண்.60, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் (பிந3) துறை, நாள் 27.05.2008.
3. அரசாணை (நிலை) எண்.39, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஐ2) துறை, நாள் 28.02.2011.
4. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடித எண். எப்1/5998/19, நாள் 14.09.2021.

* * * * *

**ஆணை:**

2021-2022 ஆம் ஆண்டிற்கான இத்துறையின் மானியக் கோரிக்கையின் போது நரிக்குறவர் மற்றும் சீர்மரபினர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகையை ஆண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், பெண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும் என்ற அறிவிப்பு மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்டது.

2. மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், சீர்மரபினர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியங்களில் பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் வழங்குவது போன்று மேற்கண்ட வாரியங்களில் பதிவு செய்துக் கொள்ளும் உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள் வழங்கவும், இந்நலத்திட்ட உதவிகளில் பதிவு செய்யப்பட்ட தகுதியுடைய உறுப்பினர் அல்லது அவரது மகன் (அ) மகள் திருமணச் செலவிற்கு உதவித் தொகையாக ரூ.2,000/- வழங்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் நல வாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் திருமண உதவித் தொகையை ஆண்களுக்கு ரூ.2,000 லிருந்து ரூ.3,000 ஆகவும், பெண்களுக்கு ரூ.2,000 லிருந்து ரூ.5,000 ஆகவும் உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கடிதத்தில், நரிக்குறவர் நல வாரியம் மற்றும் சீர்மரபினர் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருவதாகவும், அவ்வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது அவரது மகன் அல்லது மகள் திருமணச் செலவிற்கு உதவித்தொகை ரூ.2,000 வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழிலாளர்கள் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையால் திருமண உதவித் தொகை உயர்த்தி உத்திரவிடப்பட்டுள்ளது போன்று, இத்துறையின் கீழ் இயங்கிவரும் தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் மற்றும் சீர்மரபினர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் திருமண உதவித் தொகையை ஆண்களுக்கு ரூ.2,000 லிருந்து ரூ.3,000 ஆகவும், பெண்களுக்கு ரூ.2,000 லிருந்து ரூ.5,000 ஆகவும் உயர்த்தி உரிய ஆணை வெளியிடுமாறும் அரசைக் கோரியுள்ளார்.

5. மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமுடன் நன்கு பரிசீலித்து, தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரியம் மற்றும் சீர்மரபினர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்பட்டு

வரும் திருமண உதவித் தொகையை ஆண்களுக்கு ரூ.2,000 லிருந்து ரூ.3,000 (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) ஆகவும், பெண்களுக்கு ரூ.2,000 லிருந்து ரூ.5,000 (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஆகவும் உயர்த்தி வழங்கி அரசு ஆணையிடுகிறது. இவ்வுதவித் தொகையினை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை இவ்வாரியங்களுக்கான பொது வைப்புக் கணக்கில் ஒப்பளிக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளுமாறு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சாரா்பற்ற குறிப்பு எண்.47263/நிதி (பி, மிபி(ம)சிந)/2021, நாள் 28.10.2021–ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைவர், சீர்மரபினர் நல வாரியம், சென்னை.
சீர்மரபினர் நல வாரிய உறுப்பினர் – செயலர்
மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்
நல ஆணையர், சென்னை –5.
தமிழ்நாடு நரிக்குறவர் நல வாரிய உறுப்பினர் – செயலர்
மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்
நல ஆணையர், சென்னை –5.
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை– 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
மாநில கணக்காயர், சென்னை–18.
மாநில கணக்காயர், சென்னை–18, (பெயரில்).
மாநில கணக்காயர், (தணிக்கை) சென்னை–18.
மாநில கணக்காயர், (தணிக்கை) சென்னை–18. (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை– 5.

<u>நகல்</u>
முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நல அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை– 9.

நிதி (பி.மி.பி.) துறை, சென்னை– 9.
தொழிலாளர்கள் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை முதன்மை செயலாளரின்
முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/உபரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

01/11/2021
பிரிவு அலுவலர்

01/11/2021